**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,**
**SIRKALI**
**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
**Case No.DVC.5/2024**

| | | | |
|---|---|---|---|
| Deposition of Name | நதியா | Prosecution | |
| Father Name | | Defence | |
| Village | | Taluk | |
| Calling | | Age | /2025 |

Solemnly affirmed by Tmt.K. Geetha, Grade 3 bench clerk of this Court in accordance with the provisions of Act X of 1873 of the day
**10.07.2025**

**சத்தியபிரமாணம் பெறப்பட்டது.**

**முதல் விசாரணை**

எனக்கு எப்போது திருமணம் நடைபெற்றது என்றால் 25.10.2009ல் நடைபெற்றது. நான் என் கணவரிடம் கோபித்துக் கொண்டு எப்போது என் தாயார் வீட்டிற்கு வந்தேன் என்றால் 2018ல் வந்தேன். அதன் பிறகு நான் என் கணவர் வீட்டிற்கு செல்லவில்லை என்றால் சரிதான். 2021ல் எனது மாமனார் இறந்தபோது நான் என் குடும்பத்தாருடன் எதிர் மனுதாரர் வீட்டிற்கு சென்றேன் என்றால் சரிதான். அதன் பிறகு அதே வருடம், என் கணவர் என்னோடு எனது தாயார் வீட்டிற்கு வந்து சிறிது காலம் தங்கி இருந்தார் என்றால் ஒரே ஒரு நாள்தான் தங்கி இருந்தார்.

நான் புதுப்பட்டினம் அரசு மேல்நிலை பள்ளியில் பகுதி நேர ஆசிரியையாக பணிபுரிகிறேன் என்றால் தற்காலிக ஆசிரியராக அவர்கள் வேலை இருக்கிறது என்று அழைக்கும் நாட்களில் மட்டும் வேலைக்கு செல்வேன். நான் எதற்காக இந்த மனுவை தாக்கல் செய்துள்ளேன் என்றால் எனக்கும் எனது குழந்தைக்கும் ஜீவனாம்சம் கேட்டு இந்த மனுவை தாக்கல் செய்துள்ளேன். எதிர் மனுதாரர் தற்போது காஞ்சிபுரத்தில் பணியாற்றுகிறார் என்றால் சரிதான். அவர் பணி மாறுதல் வாங்கிக் கொண்டு சீர்காழிக்கு வந்து விட்டால் நான் என் குழந்தையோடு வந்து அவரோடு சேர்ந்து வாழ தயாராக உள்ளேனா என்றால் இல்லை. நான் என் கணவரோடு சேர்ந்து வாழ்வதற்கு ஏதேனும் சட்ட நடவடிக்கை மேற்கொண்டு நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. என் கணவர்

என்னோடு சேர்ந்து வாழ தயாராக இருப்பதாக சொல்லி காஞ்சிபுரம் நீதிமன்றத்தில் ஒரு வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். அந்த வழக்கில் நான் என் வழக்கறிஞர் மூலம் ஆஜராகி உள்ளேன் என்றால் சரிதான்.

என் கணவர் என்னை தாக்கி அதனால் எனக்கு தலையில் காயம் ஏற்பட்டதாக சொல்லும் நிலையில், அது சம்பந்தமாக காவல் நிலையத்திலோ அல்லது என் கணவரின் மேலதிகாரியிடத்தோ ஏதேனும் புகார் கொடுத்துள்ளேனா என்றால் கொடுக்கவில்லை. உண்மையில் என் கணவர் என்னை தாக்கவில்லை என்றாலும் நான் இந்த மனுவிற்காக பொய் காரணம் கூறியுள்ளேன் என்றாலும் சரியல்ல.

என் கணவருடைய அத்தை வீடு எங்கள் ஊருக்கு அருகில் அமைந்துள்ள தாண்டவன் குலம் என்னும் ஊரில் உள்ளது என்றால் சரிதான். எதிர்மனுதாரரின் மாமா என்னிடம் வந்து சேர்ந்து வாழ்வது பற்றி பேசிய போது நான் அவரிடம் ஒரு மாத காலம் கழித்து அது பற்றி சிந்திக்கலாம் என்று சொன்னேன் என்றால் தவறு. என்னிடம் யாரும் அப்படி கேட்கவில்லை. என்னுடைய ஒரே நோக்கம் என் கணவரிடமிருந்து ஜீவனாம்சம் பெற வேண்டும் என்பது மட்டுமே என்றாலும் அவரோடு சேர வேண்டும் என்பதோ அல்லது பிரிய வேண்டும் என்பதோ எனது நோக்கம் கிடையாது என்றாலும் சரிதான். தற்போது என்னிடம் காட்டப்படும் ஆவணம் தான் எதிர்மனுதாரர் தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் மனு செய்து, என்னுடைய வேலை பற்றி விசாரித்து பெற்ற ஆவணம் என்றால் சரிதான். (மேற்படி ஆவணம் எ.ம.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது). நான் வேலை பார்த்து மாதம் ரூ.15,000/- வருமானம் ஈட்டும் நிலையில் எனக்கு ஜீவனாம்சம் பெற தகுதி கிடையாது என்றால் சரியல்ல. என்னுடைய வேலை நிரந்தரமானது அல்ல. இந்த வருடம் புதிதாக ஆசிரியர்கள் நியமனம் செய்யப்பட்டு விடுவார்கள். அவ்வாறு நியமனம் செய்யப்பட்டால் எனக்கு வேலை போய்விடும்.

பிரசவத்திற்காக நான் என் தாயார் வீட்டிற்கு வந்திருந்த போது எதிர்மனுதாரருக்கு வேறு ஒரு பெண்ணோடு பழக்கம் ஏற்பட்டது என சொல்லும் நிலையில் அது குறித்து ஏதேனும் சட்ட நடவடிக்கை மேற்கொண்டேனா என்றால் இல்லை. நான் எப்போது பிரசவத்திற்காக என் தாயார் வீட்டிற்கு வந்தேன் என்றால் 2011ல் வந்தேன். நான் மேற்படி விபரம் பற்றி என் மனுவில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். என்னுடைய குழந்தை 1ம் வகுப்பு முதல் 4ம் வகுப்பு வரை வாலாஜாபாத்தில் உள்ள செயின்ட் ஜோசப் பள்ளியில் படித்தது என்றால் சரிதான். 4ம் வகுப்பு காலாண்டு தேர்வு வரை படித்தது. நான் குழந்தை பிறந்த பிறகு என் கணவரோடு சேர்ந்து வாழ்ந்தேன் என்றால் குழந்தை பிறந்து ஐந்து மாதம் கழித்து என் கணவரோடு சேர்ந்து வாழ்ந்தேன். எனக்கு குழந்தை பிறந்தது

செங்கல்பட்டு மாவட்டத்தில் என்றால் சரிதான். நான் எனது மனுவில் என்னை பிரசவத்திற்காக சீர்காழி அழைத்து வந்ததாக சொல்லியிருந்தால் அது தவறு என்றால் சரிதான். பிரசவத்திற்காக என்னை யாரும் சீர்காழிக்கு அழைத்து வரவில்லை என்றாலும் எதிர்மனுதாரருக்கு வேறு ஒரு பெண்ணுடன் தொடர்பு உள்ளது என சொல்வது தவறு என்றாலும் சரியல்ல.

என் கணவர் காவல்துறையில் பணிபுரிகிறார் என்றால் சரிதான். அதனால் அவர் கணிசமான சம்பளம் வாங்குகிறார் என்றால் சரிதான். ஆகவே அவரிடமிருந்து ஜீவனாம்சம் வாங்கிக் கொண்டு நான் எனது தாயார் வீட்டிலேயே நிரந்தரமாக தங்கி இருக்க முடிவெடுத்துள்ளேன் என்றால் என் கணவர் என்னை நிறைய கொடுமைப்படுத்தி உள்ளதால் அவரை என்னால் ஏற்றுக்கொண்டு சேர்ந்து வாழ முடியவில்லை. என் மகளுக்கு ஜீவனாம்சம் மிகவும் அவசியம். எனக்கு ஜீவனாம்சம் தேவை இல்லையா என்றால் எனக்கும் ஜீவனாம்சம் வேண்டும்.

நான் எனது திருமணத்தின் போது எங்கள் வீட்டில் 45 சவரன் பவுன் நகை போட்டதாகவும், என் கணவருக்கு இருசக்கர வாகனம் வாங்கி கொடுத்ததாகவும் சொல்லும் நிலையில் அதற்கான ஆவணங்கள் ஏதேனும் இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் எங்கள் திருமணம் 2009ல் நடந்ததால் நான் அது குறித்த ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை. அதேபோல, 2 லட்ச ரூபாய் மதிப்புள்ள சீர்வரிசை சாமான்களும் செய்ததாக சொல்லும் நிலையில் அதற்கு சான்றாவனங்களும் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். என் கணவர் வீட்டிலிருந்து நாங்கள் சேர்ந்து வாழ்வது சம்பந்தமாக பேச பலமுறை வந்திருந்தார்கள் என்றாலும் நான் தான் விடாப்படியாக சேர்ந்து வாழ்வதை தவிர்த்தேன் என்றாலும் சரியல்ல. இதுவரை 3 முறை வந்துள்ளார்கள். அவ்வாறு வந்த ஒவ்வொரு முறையும் என்னை பிரச்சினையில் சிக்க வைத்துள்ளார்கள். அதனால்தான் நான் அவரோடு சேர்ந்து வாழ மாட்டேன் என்று சொல்கிறேன். One time settlement கொடுத்தால் விவாகரத்துக்கு சம்மதம் என்று நான் என் கணவர் தரப்பினரிடம் தெரிவித்தேன் என்றால் சரியல்ல.

என்னுடைய மகள் தற்போது எங்கு படிக்கிறார் என்றால் புத்தூரில் உள்ள மீனாட்சி வித்யாலயா மெட்ரிகுலேஷன் பள்ளியில் படிக்கிறார். ஒவ்வொரு முறையும் எனது மகளுக்கு பள்ளி கட்டணத்தை என் கணவர் தான் செலுத்துவார் என்றால் தவறு. நான்தான் கஷ்டப்பட்டு சம்பாதித்து பணத்தை கட்டி வருகிறேன். இதிலிருந்தே நான் பல வருடங்களாக வேலை பார்த்து சம்பாதிக்கிறேன் என்பது தெரிகிறது என்றால் தவறு. நான் M.A.B.ED Graduate என்பதால் வேலைக்கு செல்கிறேன். சென்ற வருடம் தான் வேலைக்கு செல்ல ஆரம்பித்தேன். தற்போது தற்காலிக பணியில் வேலை செய்து வருகிறேன். தற்போது கூட என் கணவர்

என்னோடு சேர்ந்து வாழ தயார் என்றாலும் நான்தான் ஜீவனாம்சம் பெறுவதற்காக சேர்ந்து வாழ்வதை தவிர்க்கிறேன் என்றாலும் இவ்வளவு காலம் கழித்து என் கணவர் சேர்ந்து வாழ அழைப்பதால் என்னால் அவரோடு செல்ல முடியாது. என் கணவருக்கு விவாகரத்து கொடுக்க தயாரா என்றால் அதைப் பற்றி இந்த வழக்கில் கூற முடியாது.

என் கணவருடைய உறவினர்களால் எனக்கு எந்த தொந்தரவும் கிடையாது என்றால் முன்பு இருந்தது. தற்போது இல்லை. அவ்வாறு தொந்தரவு இருந்ததாக நான் இந்த மனுவிலோ அல்லது காஞ்சிபுரம் வழக்கில் தாக்கல் செய்த பதிலுரையிலோ குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். இந்த வருடம் வரை என் கணவர் தான் என் மகளுக்கு பள்ளி கட்டணம் செலுத்தி வருகிறார் என்றால் சரியல்ல.

என் கணவருக்கு நுரையீரல் பிரச்சனை இருக்கிறது என்பது தெரியுமா என்றால் நான் அது குறித்து கேள்விப்பட்டேன். மேற்படி நோய் சிகிச்சைக்காக அவர் மாதா மாதம் காஞ்சிபுரம் மருத்துவமனைக்கு சென்று சிகிச்சை எடுத்து வருகிறார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் சொல்வது பொய் என்றாலும் எனக்கு அது பற்றி எல்லாம் நன்றாக தெரியும் என்றாலும் சரியல்ல. மேற்படி சிகிச்சைக்காக மாதம் ரூ.20,000/– அவருக்கு செலவாகிறது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் என் கணவரை பழிவாங்கும் நோக்கோடு தான் இந்த மனுவை தாக்கல் செய்து உள்ளேன் என்றால் சரியல்ல. இந்த மனுவில் முகாந்திரம் இல்லை என்பதால் இம்மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டியது என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்பட்டது**

**மறுவிசாரணை இல்லை**